**செய்தி வெளியீடு எண் : 618** **நாள் : 16.04.2022**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**தேசிய சீனியர் ஆண்கள் வளைகோல் பந்து சாம்பியன்ஷிப்–2022**
**(12th Senior Men's National Hockey Championship-2022)**
**இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி**

**மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

மத்திய பிரதேசம் மாநிலம், போபாலில், 12–ஆவது இந்திய சீனியர் ஆண்கள் வளைகோல் பந்து போட்டிகள் கடந்த 6–ஆம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இப்போட்டிகளில் 27 மாநிலங்களை சார்ந்த அணிகள் கலந்து கொண்டு விளையாடின. இன்று (16.04.2022) நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா அணிகள் மோதின. இதில் தமிழ்நாடு அணி, கர்நாடக அணியை 3–0 என்ற கோல் கணக்கில் வென்றது. தமிழ்நாடு அணி வீரர்கள் ஜோஷ்வா, சுந்தரபாண்டி மற்றும் சரவணகுமார் ஆகியோர் அரையிறுதி ஆட்டத்தில் தலா ஒரு கோல் அடித்தனர்.

மேலும், நாளை (17.04.2022) நடைபெறும் இறுதிப் போட்டியில் தமிழ்நாடு அணி, ஹரியானா அணியை எதிர் கொள்கிறது. கடந்த 22 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாடு அணி இறுதி ஆட்டத்தில் பங்கு பெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அணியின் கேப்டனாக திரு. ஷயாம் குமார், பயிற்சியாளராக திரு. சார்லஸ் டிக்சன், மேலாளராக திரு. முத்துக்குமரன் மற்றும் தமிழ்நாடு ஹாக்கி சங்கத் தலைவர் திரு. சேகர் மனோகரன் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in